FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348086

1. District மாவட்டம் : Krishnagiri | PS: VAC காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 09/AC/2026 மு.த.அ. எண் | Date: 04.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988, as amended in 2018. | Sections பிரிவுகள்: 7 (a)

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : 04.08.2026 | Date to நாள் வரை : before 05.05 hrs.

Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் : | Time to நேரம் வரை :

(b) Information Received at PS. Date : 04.08.2026 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time நேரம் : 12.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் :

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 55 KM West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Transport Department Checkpost (out ward) Zuzuvadi, Hosur.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Mohandass | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. Ramadoss

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-54 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

(f) Occupation : தொழில் Special Tahsildar (SSS) | (g) Address : முகவரி Taluk office, Pochampalli, Krishnagiri District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. G. Mahalakshmi, Motor Vehicle Inspector (N.T), Transport Department Check Post (Outward), Zuzuvadi, Hosur.
2) Tmt. R. Vijaya, Assistant, Transport Department Checkpost (outward), Zuzuvadi, Hosur.
3) Tr. G. Sampathkumar, Office Assistant, Transport Department Checkpost (outward), Zuzuvadi, Hosur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet If necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :-

Separate Sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

04/08/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.08.2026 at 13.30 hrs

Name: பெயர் S. Rowi
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
VGAC, Krishnagiri

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 04.08.2026-ம் தேதி 12.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திரு.R.மோகன்தாஸ், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.R.மோகன்தாஸ், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள் 03.08.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்திருந்தார். எனக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் போக்குவரத்து துறை வெளிவழி சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளி மாநிலத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குள் நுழையும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும், விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், மாவட்ட ஆயுதப்படை பெண் காவலர் 2062 திருமதி.R.சரண்யா மற்றும் காவல் குழுவினருடன் ஒசூர் ஜுஜுவாடி போக்குவரத்து துறை வெளிவழி சோதனைச்சாவடிக்கு வந்து, காலை 05.05 மணிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டேன். மேற்படி சோதனைச்சாவடியில் வாகனங்களை நிறுத்தும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபர்களான 1) திரு.A.ஹரி, 2) திரு.A.ரவிச்சந்திரன், 3) திரு.D.சுப்பிரமணி மற்றும் 4) திரு.M.பிரபாகரன் ஆகியோர்களிடம் விசாரிக்க, தாங்கள் வெளிவழி சோதனை சாவடியில்

தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலத்திற்கு செல்லும் வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் அறிவுரைப்படி சோதனை சாவடியில் நிறுத்தி, வாகன ஓட்டுனர்கள்/ உரிமையாளர்களிடம், பணம் பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் அலுவலர்களுக்கு தருவதாகவும், அதற்காக பணியிலிருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தங்களுக்கு தினசரி கூலியாக ஒவ்வொருவருக்கும் ரூ.1,000/- வீதம் தருவதாகவும் தெரிவித்தார்கள். நானும், காவல் ஆய்வாளர் அவர்களும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.G.மகாலட்சுமி அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு, சோதனைச்சாவடியில் திடீர் ஆய்வுசெய்ய வந்திருக்கும் விவரம் தெரிவிக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.G.மகாலட்சுமி 03.08.2026-ம் தேதி இரவு 08.00 மணி முதல் 04.08.2026-ம் தேதி காலை 08.00 மணி வரை சோதனைச்சாவடியில் அலுவலில் இருந்துவருவதாகவும், தன்னுடன் உதவியாளர் திருமதி.R.விஜயா மற்றும் அலுவலக உதவியாளர் திரு.G.சம்பத்குமார் பணியில் உள்ளதாக தெரிவித்தார். பின்னர், உதவியாளர் திருமதி.R.விஜயா அவர்களிடம் அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து கேட்டதற்கு, இரவு 08.00 மணி முதல் காலை 05.15 மணி வரை பல்வேறு இனங்களில் வசூலான தொகை குறித்த வசூல் அட்டவணையை கணினியிலிருந்து அச்சுப் பிரதி எடுத்து ஆஜர் செய்து, 03.08.2026-ம் தேதி இரவு 08.00 மணி முதல் 04.08.2026-ம் தேதி காலை 05.15 மணி வரையில் அரசு கணக்கில் வரி ரூ.2,50,914/, இணக்கக் கட்டணம் ரூ.8,000/-, சேவைக் கட்டணம் ரூ.2,800/-, 1% வரி ரூ.2,523/- என ஆகமொத்தம் ரூ.2,64,237/- வசூல் செய்துள்ளதாக தெரிவித்து, அவர் அமர்ந்திருந்த கணினி மேசையின் வலதுபக்க டிராயரில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். நான் அதை எண்ணிப்பார்க்கையில் பணம் ரூ.2,64,237/- சரியாக இருந்தது. பின்னர் நான் அரசு கணக்கில் வேறு ஏதாவது பணம் உள்ளதா என்று மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டதற்கு, 03.08.2026-ம் தேதி காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை பணியில் இருந்த உதவியாளர் திரு.P.கணேசன் ரூ.5,81,767/- வசூல் செய்துள்ளதாக தெரிவித்து, பண பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில், வரி ரூ.5,57,263/-, சேவைக் கட்டணம் ரூ.5,410/-, இணக்க கட்டணம் ரூ.13,500/- மற்றும் 1% வரி ரூ.5,594/- என மொத்தம் ரூ.5,81,767/- வசூல் செய்யப்பட்ட விவரம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் எடுத்து ஆஜர்

செய்த பணத்தை எண்ணிப்பார்க்கையில் பணம் ரூ.5,81,767/- சரியாக இருந்தது. பின்னர், திடீர் ஆய்வின் போது, மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு முன்பு வடக்கில் அமைந்திருந்த மூன்று பகுதிகளை கொண்ட கணினி மேசைகளை, கிழக்குபுறத்திலிருந்து ஒவ்வொரு அறையாக சோதனை செய்யப்பட்டது. முதலாவது டிராயரை சோதனை செய்தபோது, அதில் ஒரு காக்கிநிற அலுவலக கவரில் ரூ.83,400/- (500X164 + 200X3 + 100X8) மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறைக்கு பின்பகுதியில் இருந்த சமையல் அறை மற்றும் பழைய பதிவேடுகள் பராமரிக்கும் அறையின் தெற்கு சுவரை ஒட்டி வடக்கு பார்த்தவாறு இருந்த இரும்பு பீரோவின் கைப்பிடியில் மாட்டிவைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் பையில் இருந்த பணம் ரூ.50,000/- (500X100) என மொத்தம் ரூ.1,33,400/- கணக்கில் வராத பணம் இருந்தது. மேற்படி கணக்கில்வராத பணம் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்ததற்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பெற்ற பணம் என்பதால், திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையில் மேற்படி பணம் ரூ.1,33,400/- கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது, ஒசூர் போக்குவரத்து துறை வெளிவழி சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,33,400/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.G.மகாலட்சுமி, உதவியாளர் திருமதி.R.விஜயா மற்றும் அலுவலக உதவியாளர் திரு.G.சம்பத்குமார், ஆகியோரின் வாக்குமூலங்கள் திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையுடன் ஆஜர்படுத்துகிறேன். ஒசூர், போக்குவரத்து துறை வெளிவழி சோதனைச்சாவடியில் பணிபுரியும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.G.மகாலட்சுமி, உதவியாளர் திருமதி.R.விஜயா மற்றும் அலுவலக உதவியாளர் திரு.G.சம்பத்குமார் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் திரு.R.மோகன்தாஸ்.

மேற்கண்ட புகாரின்படி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, மேற்கு சரக, காவல் கண்காணிப்பாளர், அவர்களின் உத்தரவுபடி கிருஷ்ணகிரி

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி இன்று 04.08.2026-ம் தேதி 12.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்பமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

04/08/2026

Inspector of Police

VSAC Krishnagiri